IN THE COURT OF JUDICIAL MAGISTRATE ARAKKONAM, VELLORE DISTRICT

PAGE NO.54/2023
DEPOSITION OF WITNESS
(Chapter XXIIII of Criminal Procedure

| | | |
|---|---|---|
| Calender | : CC.60/2020 | PW-1 |
| Name | : **சிவசங்கர்** | |
| Father Name | : **சிவலிங்கம்** | |
| Village | : **அரக்கோணம்** | |
| Calling | : எலக்ட்ரிசன் | |
| Age | : 42 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 23.02.2024.

( எதிரிகள் ஆஜர் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை)

முதல் விசாரணை சத்தியப்பிரமாமணம் செய்யப்பட்டது.

அ.சா.பாலாஜி தெரியாது. ஆஜர் எதிரிகள் அரக்கோணத்தில் உள்ள மேட்டுத்தெருவில் மருத்துவமனை வைத்திருப்பதாக கேள்விப்பட்டு இருக்கிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. 2018 ல் மதியம் நேரத்தில் மேட்டுத்தெருவில் பைக் சர்விஸ் செய்துகொண்டிருந்தேன். சம்பவம் பற்றி கேள்விப்பட்டேனா என்று இரண்டு போலிஸ்சார் விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அதில் நான் கையெழுத்து போட்டேன் என்னிடம் காட்டப்படும் ஆவணம் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கைெழுத்து அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் யார் கையெழுத்து போட்டார்கள் என்று தெரியாது. அதில் உள்ள விவரங்கள் தற்போது ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்ததை பற்றி கேள்விப்பட்டதாக கூறி அதை போலிஸ் விசாரணையில் சொன்னேன். மருத்துவமனையில் அனுமதித்தபோது பெண்ணிடம் தப்பாக நடந்ததாக நான் கேள்விப்பட்டேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை</u>**

நான் எங்கு வசிக்கிறேன் என்றால் காந்தி நகரில் வசிக்கிறேன். போலிசார் என்னிடம் எத்தனை தாளில் கையெழுத்த வாங்கினார்கள் என்றால் ஒரு தாளில் வாங்கினார்கள். வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை எழுதிய தாளில் கையெழுத்து வாங்கினார்கள். அதில் என்ன எழுதியுள்ளது தெரியுமா என்றால் வரைபடம் வரைந்துள்ளது அதன் விவரங்கள் எழுதியதாக சொன்னார்கள். என் கையெழுத்தை சிவசங்கர் என்று போட்டேனா சிவசேகர் என்று போட்டேன் என்றால் சிவசங்கர் என்று தான் போட்டேன்.அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் போலிசார் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் இல்லை கடையிடம் தான் வாங்கினார்கள்